**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 59 / 2024**

**2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 4ம் நாள் செவ்வாய்கிழமை**

**வா.சா.1** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு. வீரக்குமார் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜோதிபிரியா | க/பெ | கார்த்திக் |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. "அ" பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.1
2. பொன்னுச்சாமிபிள்ளை இறப்புச்சான்றிதழ் நகல் வா.சா.ஆ.2 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)
3. பட்டா எண் 1161 இணையதள சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3
4. கிரைய ஆவண எண் 341/2008 இணையதள சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகின்றது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி

**மானாமதுரை**